இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 13.04.2026

# பா.ஜ.க. கொண்டு வரும் பேராபத்து!

**மே**ற்கு வங்க மாநிலத்துக்கான தேர்தல் அறிக்கையை பா.ஜ.க. வெளியிட்டு உள்ளது. இதனை உள்துறை அமைச்சர் அமித்ஷா வெளியிட்டுள்ளார். **‘மேற்கு வங்க மாநிலத்தில் ஆட்சிக்கு வந்த ஆறு மாதத்தில் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவோம்’** என்று பா.ஜ.க. வாக்குறுதி அளித்துள்ளது.

மேற்கு வங்காளத்தில் முர்ஷிதாபாத் நகரில் நடைபெற்ற தேர்தல் பரப்புரை பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி அவர்கள், **“ஊடுருவல்காரர்களை பாதுகாக்க திரிணாமுல் காங்கிரஸ் கட்சி திருப்திப்படுத்தும் அரசியலைச் செய்து வருகிறது. நாட்டின் பாதுகாப்பில் சமரசம் செய்து கொள்ள முடியாது. திருப்திப்படுத்தும் அரசியலுக்கு முடிவுரை கட்ட மேற்கு வங்கத்தில் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவதில் பா.ஜ.க. உறுதியாக இருக்கிறது”** என்று பேசி இருக்கிறார்.

பா.ஜ.க.வின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று பொது சிவில் சட்டம் ஆகும். பல்வேறு இனங்கள், மொழிகள், பண்பாடுகள், பழக்க வழக்கங்கள் கொண்ட மக்கள் வாழும் நாடு இது. இங்கு பலதரப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு தரும் சட்டங்கள் இருக்கின்றன. இவை அனைத்தையும் நீக்கிவிட்டு அனைவருக்கும் பொதுவான ஒரு சட்டத்தை கொண்டு வரத் துடிக்கிறது பா.ஜ.க.

திருமணம், விவாகரத்து, சொத்துரிமை, தத்தெடுப்பு ஆகியவை பொதுவாக அனைவருடனும் கலந்தது. ஆனால் இவை ஒரே மாதிரியாக நடத்தப்படுகிறதா என்றால் இல்லை. இந்துக்கள் அனைவரும் ஒரே முறைப்படி திருமணம் செய்வது இல்லை. மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுகிறது. ஒரே மாநிலத்துக்குள் பல்வேறு வகையில் திருமணங்கள் நடக்கின்றன. குடும்பம் என்ற அமைப்பு முறை, பொதுப்பண்பாட்டுடன் இயங்குவது இல்லை.

**இந்திய அரசமைப்புச் சட்டம் பல்வேறு சிறப்புரிமைகளை, பல்வேறு வகைப்பட்ட மக்களுக்கு வழங்கி இருக்கிறது. இது பன்முகத் தன்மையைக் காக்க வழங்கப்பட்ட உரிமை ஆகும். அதை குலைக்கப் பார்க்கிறது பொது சிவில் சட்டம். இசுலாமியர்கள், கிறிஸ்தவர்கள் தங்களுக்கென தனித்தனி திருமணச் சட்டங்களை வைத்திருப்பதுதான் பா.ஜ.க.வை உறுத்துகிறது. அனைத்து மதங்களின் தனிநபர் சட்டமும் இவர்களுக்கு எரிச்சல் தருகிறது. அதை எடுக்க வேண்டும். அதுதான் இவர்களது உண்மையான நோக்கம்.**

இது தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் தொடர்ந்து நடந்து வருகிறது. 2016 ஆம் ஆண்டு ஒன்றிய சட்டத் துறை அமைச்சகம், சட்ட ஆணையத்துக்கு ஒரு கோரிக்கை வைத்தது. பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவதற்கான ஆலோசனைகளைக் கேட்டது. 2018 ஆம் ஆண்டு சட்ட ஆணையம் தனது கருத்தைத் தெரிவித்தது. பொது சிவில் சட்டம் தேவையில்லை என்று சொன்னது.

உத்தரகாண்ட் மாநில பா.ஜ.க. அரசு பொது சிவில் சட்டத்தை 2024 ஆம் ஆண்டே நிறைவேற்றிவிட்டது. இந்தியாவில் இந்தச் சட்டத்தை நிறைவேற்றிய முதல் மாநிலம் இதுதான். அனைத்து மதத்தினருக்கும் பொது சிவில் சட்டத்தை உருவாக்கிய உத்தரகாண்ட் அரசு, பழங்குடியின மக்கள் இந்த மசோதாவுக்குள் வர மாட்டார்கள் என்ற சலுகையை வழங்கியது. ஏனென்றால் பழங்குடியினர் இதனைக் கடுமையாக எதிர்ப்பார்கள் என்று தெரியும். இத்தகைய சட்டத்தை அமல்படுத்த விடமாட்டார்கள் என்று தெரியும். அதனால் தப்பித்துக் கொண்டது உத்தரகாண்ட் பா.ஜ.க. அரசு. பழங்குடியினரை மட்டும் விலக்கும் சட்டம், எப்படி பொது சிவில் சட்டம் ஆகும்?

பொது சிவில் சட்டத்தை முஸ்லீம் தனிச் சட்ட வாரியம் தனது கடுமையான எதிர்ப்பை 2023 ஆம் ஆண்டே சொல்லியது. உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் கூடிய இந்த சட்டவாரிய உறுப்பினர்கள், மத்திய சட்ட ஆணையத்துக்கு விரிவான கடிதத்தை அனுப்பினார்கள். சிறுபான்மையினரின் உரிமையில் இந்தச் சட்டம் தலையிடுகிறது என்று சொன்னார்கள். சீக்கியர்களின் சிரோமணி அகாலி தளம் கட்சியின் நிர்வாகிகள் கூட்டம் இதனை எதிர்த்துள்ளது. ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட பழங்குடி அமைப்பினர் சேர்ந்து எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். காசி ஹில்ஸ் என்ற தன்னாட்சி பெற்ற மாவட்டக் கவுன்சில் இதனை எதிர்த்துள்ளது. காசி சமூகத்தின் பழக்க வழக்கங்கள் பாதிக்கப்படும் என்கிறார்கள் இவர்கள். அரசியலமைப்பின் ஆறாவது அட்டவணையில் சிறப்பு சலுகை பெற்றிருக்கும் சமூகம் இது.

2023 ஆம் ஆண்டு இந்திய சட்ட ஆணையத்தின் தலைவர் மாண்புமிகு நீதியரசர் ரிதுராஜ் அவஸ்திக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விரிவான கடிதத்தை எழுதினார்கள். பொது சிவில் சட்டம் கூடாது என்பதற்கு அதில் வலுவான வாதங்களை வைத்துள்ளார்கள்.

★ **“ஒருவர், தான்விரும்பும் மதத்தைப் பின்பற்றுவதற்கும், கடைப்பிடிப்பதற்கும், பரப்புவதற்குமான உரிமையை” இந்திய அரசியலமைப்பு சட்டம் உறுதி செய்துள்ளது. அதனை பொது சிவில் சட்டம் மீறுகிறது.**

★ **ஒரே மதத்தைப் பின்பற்றும் மக்களிடையே கூட, பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும் இடத்திற்கு இடம் மற்றும் வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபடும் நிலையில், அவர்களிடையே ஒருமித்த கருத்தை எட்டாமல் அத்தகைய ஒப்புதல் சாத்தியமில்லை.**

★ **பழங்குடியினர் உட்பட சிறுபான்மையினரின் தனித்துவமான மத, கலாச்சார அடையாளத்தை அழித்து, செயற்கையாக ஒரேமாதிரியான பெரும்பான்மை சமூகத்தை உருவாக்குவதற்கான முயற்சி இது.**

★ **பழங்குடி சமூகங்கள் உட்பட பல்வேறு சமூகங்களின் தனித்துவமான மரபுகள், நடைமுறைகள் மற்றும் தனிப்பட்ட சட்டங்களை மதித்து பாதுகாப்பது முக்கியம்.**

★ **இது மத விவகாரங்களில் ஒன்றிய அரசின் அத்துமீறலாகவே கருதப்படும்.**

★ **இந்த சட்டம் பல்வேறு மத சமூகங்களிடையே ஆழமான பிளவுகளையும் சமூக அமைதியின்மையையும் உருவாக்கும்.**

★ **இது முரண்பாடுகளை உருவாக்கி பகைமையை வளர்க்கக்கூடியது.**

★ **பழங்குடி சமூகத்தை இது அதிகமாக பாதிக்கும்.**

★ **அனைவருக்கும் பொதுவான நடைமுறையானது ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கும்.**

★ **நமது நாட்டின் பலம், அதன் பன்முகத்தன்மையில் உள்ளதாகவும், பொது சிவில் சட்டத்தின் மூலம் அதை ஒருமுகப்படுத்த முயற்சிப்பதை விட, நாம் நமது பன்முகத்தன்மையை நிலைநிறுத்திக் கொண்டாட வேண்டும்.** என்று அந்தக் கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு உள்ளார்கள். இதே போல் பல மாநில முதலமைச்சர்களும் எதிர்ப்பு தெரிவித்தார்கள். பா.ஜ.க. ஆளும் மாநில முதலமைச்சர்கள் சிலரும் அப்போதே எதிர்ப்பை பதிவு செய்தார்கள். அனைத்து மாநிலங்களிலும் இது உள்நாட்டு குழப்பத்தை ஏற்படுத்தும்.

எனவே, பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவோம் என்ற வாக்குறுதியை பா.ஜ.க. திரும்பப் பெற வேண்டும்.

●●



பரமக்குடியில், சட்டமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திற்கு வருகைபுரிந்த கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.4.2026) காலை அங்கு நடைபயிற்சி மேற்கொண்டபோது, அங்கு நெசவு தொழில் செய்பவரின் வீட்டிற்கு நேரில் சென்று அவர்களுடன் நெசவு செய்து கலந்துரையாடினார்.



வேலூர் மாவட்டம் – காட்பாடி சட்டமன்றத் தொகுதி மத சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வள்ளிமலை, மேல் பாடி பகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இதில் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர்ஆனந்த், ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலினின் முத்தான திட்டமான

# ‘நான் முதல்வன்’ திட்டத்தினால் 56 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் உருவாகியுள்ளனர்!

## திருவண்ணாமலையில் வீதி, வீதியாக வாக்குச் சேகரித்த அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

**திருவண்ணாமலை, ஏப். 13-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முத்தான திட்டமான நான் முதல்வன் திட்டத்தால், தமிழகத்தில் 56க்கும் மேற்பட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் உருவாகி இருக்கிறார்கள் என்று திருவண்ணாமலையில் வீதி, வீதியாக வாக்குசேகரித்து பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக வேட்பாளருமான எ.வ.வேலு உரையாற்றும்போது குறிப்பிட்டார்.**



12.04.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00மணிக்கு, திருவண்ணா மலை திருவள்ளுவர் சிலை அருகிலிருந்து, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின், திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு அவர்கள் பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தலை தொடங்கினார்.

திருவள்ளுவர் சிலை அருகிலிருந்து தொடங்கிய வாக்குசேகரிக்கும் நிகழ்ச்சி கோபால் தெரு, முகல்புறாத் தெரு, கல் நகர், மாரியம்மன் கோயில் 12 தெருக்கள், சமுத்திரம் காலனி வரை, வீதி, வீதியாக பொது மக்கள் மற்றும் வியாபாரி களிடம் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் வாக்கு சேகரித்தார்.

வாக்குசேகரிப்பின்போது அவர் பேசியதாவது:-

இந்தியாவிற்கே வழிகாட்டும் திராவிட மாடல் நாயகன், அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆசியோடு இந்த தொகுதியில் உங்கள் வேட்பாளராக நான் போட்டியிடுகிறேன்.

நமது நகராட்சி மக்களின் வேண்டுகோளுக்கிணங்க மாநகராட்சியாக மாற்றப்பட்டிருக்கிறது. அப்படி மாற்றப்பட்ட மாநகராட்சி அதற்குரிய வசதி வாய்ப்புகளோடு இயங்க வேண்டும்.

### இது நம்முடைய மண் இதற்காக தொடர்ந்து உழைப்பேன்!

வளர்ச்சி என்பது நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருப்பது. தேவைகளும் கூடிக்கொண்டே இருக்கும். அதனால், மாநகரத்தை வளர்ச்சிக்கேற்றாற்போல் கட்டமைத்திட வேண்டும். அரசின் அத்தனை திட்டங்களும் மாநகராட்சிக்கு கிடைத்திட வேண்டும். நான் என் சக்திக்குமீறி இந்த தொகுதிக்காக பல திட்டங்களையும், வசதி வாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளேன். இது போதுமா என்று கேட்டால், மாநகரம் வளர வளர நாம் திட்டங்களை யும் அதிகப்படுத்திக்கொண்டே செல்ல வேண்டும். இது நம்முடைய மண். இதற்காக நான் தொடர்ந்து உழைப்பேன்.

இந்திய ஆட்சிப்பணி, காவல் பணிக்கான தேர்வுகள் அனைத்தும் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. இத்தனை ஆண்டுகாலமாக தொடர்ந்து வட மாநிலங்களான உத்திரப்பிரதேசம், பீகார், மத்தியபிரதேசம் போன்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்தான், மாவட்ட ஆட்சித் தலைவர்களாக, துறைச் செயலாளர்களாக நம்மை ஆண்டார்கள். நமது மொழி புரியாமல், பண்பாடு புரியாமல் அவர்களின் வசதிக்கேற்ப நம்மை ஆண்டு கொண்டிருந்தார்கள்.

தற்போது இந்தியாவிற்கே வழிகாட்டும் திராவிட மாடல் அரசின் நாயகனான அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களின் முத்தான திட்டங்களில் ஒன்றான நான் முதல்வன் திட்டத்தால், தமிழ்நாட்டில் படித்த பட்டதாரி மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை கிடைத்தது, இலவச பயிற்சி கிடைத்தது. அதனுடைய விளைவு தற்போது தமிழர்கள் 56பேர் ஐஏஎஸ் அதிகாரிகளாக உருவாகி இருக்கிறார்கள்.

தற்போது தேர்தல் கதாநாயகனான கழகத் தேர்தல் அறிக்கையில் இல்லதரசி திட்டத்தில், தாய்மார்கள் விரும்பும் பொருட்களை வாங்க ரூ.8,000 கூப்பன், கலைஞர் மகளிர் உதவித் தொகை ரூ.1000 லிருந்து ரூ. 2000ஆகவும், புதுமைப் பெண், தமிழ் புதல்வன் திட்டத்தில் ரூ.1000லிருந்து ரூ.1500 ஆகவும், தேர்தல் முடிந்தவுடன் வழங்குவதாக அண்ணன் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சாதனை ஆட்சிசியான, திராவிட மாடல் ஆட்சி தொடர்ந்திட, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கரத்தினை வலுப்படுத்திட கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வாக்குசேகரிப்பின் போது அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் கூறினார்.

வாக்குசேகரிப்பு நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங்கன், காங்கிரஸ் மாவட்டத் தலைவர் கே.குணசேகரன், தி.க. தலைவர் சி.மூர்த்தி, ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் சீனி.கார்த்திகேயன், தே.மு.தி.க. மாவட்ட செயலாளர் வி.எம்.நேரு, சி.பி.எம். எம்.சிவக்குமார், சி.பி.ஐ., மாவட்ட செயலாளர் இரா.திருமலை, முஸ்லீம் லீக் மாவட்ட தலைவர் ஐ.எம்.சுலைமான் கான், விடுதலை சிறுத்தைகள் மாவட்ட செயலாளர் ச.நியூட்டன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்டத் தலைவர் நாசர் உசேன், மக்கள் நீதி மைய்யம் மண்டல பொறுப்பாளர் இரா.அருள், மனிதநேய ஜனநாயக கட்சி ஜி.கேட் குமார், எஸ்.டி.பி.ஐ.மாவட்ட தலைவர் முஸ்தாக் பாஷா, தமிழக முன்னேற்றக் கழக நிறுவனத் தலைவர் கு.ராஜாராம், தமிழக விவசாய தொழிலாளர் பி.வாசு, ஆதித் தமிழர் பேரவை எஸ்.கந்தன், தலித் விடுதலை இயக்கம் என்.ஏ.கிச்சா மற்றும் துணை மேயர் சு.ராஜாங்கம், பகுதி பொறுப்பாளர்கள் சு.விஜி(எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப் மற்றும் கூட்டணி இயக்கத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.